சுருக்கம்

பத்திரப்பதிவு அலுவலகம் – வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தினை தற்போது நொளம்பூர் கிராமத்தில் புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்தில் உள்ள மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைத்தும், வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களை அதே பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைத்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (ஜி) துறை

அரசாணை (நிலை) எண்.48

நாள்: 26.02.2021
சார்வரி, மாசி–14,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது:

பதிவுத்துறைத் தலைவரின் கடித எண்.31027/ஜி3/2020, நாள் 13.02.2021.

---

**ஆணை:**

பதிவுத்துறைத் தலைவர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தினை தற்போது நொளம்பூர் கிராமத்தில் புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்தில் உள்ள மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கலாம் என்றும், மேலும் வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களை அதே பதிவு மாவட்டத்திலுள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கலாம் என்றும் தெரிவித்து இது தொடர்பான உரிய ஆணையினை வழங்குமாறு அரசிடம் கேட்டுக்கொண்டார்.

2. மேலும், இந்நேர்வு தொடர்பாக பதிவுத்துறைத்தலைவர், சென்னை துணைப்பதிவுத்துறை தலைவர், வட சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்டப்பதிவாளர்கள் ஆகியோரின் கூட்டுக் கள ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில், பின்வரும் விவரங்களை அரசுக்குத் தெரிவித்துள்ளார்:-

(அ) கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தில் சர்வே எண்.46/2 மொத்த விஸ்தீரணம் 1.36.0 ஹெக்டேரில் 0.20.0 ஏர்ஸ்–ல் புதியதாக ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

Verified RealEstate

(ஆ) அவ்வொருங்கிணைந்த பதிவுத்துறை வளாகத்தில் மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட வில்லிவாக்கம், அசோக் நகர், அண்ணா நகர், கோடம்பாக்கம், புரசைவாக்கம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட விருகம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகங்கள் என மொத்தம் ஆறு அலுவலகங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டது. தற்போதுள்ள அமைவிடத்தில் தரைதளம் போக முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் தலா இரண்டு அலுவலகங்கள் என மொத்தம் நான்கு அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(இ) நொளம்பூர் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் (Integrated Complex) கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சுமார் 7 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

(ஈ) வட சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமம் பெரும்பாலும் குடியிருப்பு பகுதிகளை உள்ளடக்கியதாக உள்ளது. இக்கிராமத்தைப் பொறுத்து ஏறக்குறைய வருடம் ஒன்றுக்கு 1300 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு சுமார் 30 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் ஈட்டப்படுகிறது. இது கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்த ஆவணப்பதிவில் 20 சதவீதமும் வருவாய் இலக்கில் சுமார் 30 சதவீதமும் ஆகும்.

(உ) மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட 3 சார்பதிவாளர் அலுவலகங்களும் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட ஒரு சார்பதிவாளர் அலுவலகமும் வட சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தில் கட்டப்பட்டுள்ளதால், நொளம்பூர் கிராமத்தினை ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் அமையப்பெற உள்ள மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட ஏதேனும் ஒரு பதிவு அலுவலகத்துடன் இணைப்பதே முறையானதாகவும், சாலச்சிறந்ததாகவும் உள்ளது.

(ஊ) கடந்த மூன்று நிதியாண்டுகளில் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரமும் அதன் எல்லைக்குட்பட்ட நொளம்பூர் மற்றும் முகப்பேர் கிராமங்களில் பதிவான ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு:-

i) 2018 முதல் 2020 வரையிலான 3 நிதியாண்டுகளில் கொன்னூர் அலுவலகத்தில் பதிவான ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரம்:–

| வ.எண் | ஆண்டு | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 2017–18 | 6586 | 88,25,30,350/– |
| 2 | 2018–19 | 6947 | 103,56,20,280/– |
| 3 | 2019–20 | 6819 | 99,66,69,369/– |

ii) 2018 முதல் 2020 வரையிலான 3 நிதியாண்டுகளில் நொளம்பூர் கிராமத்தில் பதிவான ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரம்:–

| வ.எண் | ஆண்டு | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 2017–18 | 1316 | 26,21,30,350/– |
| 2 | 2018–19 | 1390 | 33,11,20,555/– |
| 3 | 2019–20 | 1256 | 30,01,10,564/– |

Verified @ RealEstate

iii) 2018 முதல் 2020 வரையிலான 3 நிதியாண்டுகளில் முகப்பேர் கிராமத்தில் பதிவான ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விபரம்:–

| வ.எண் | ஆண்டு | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 2017–18 | 3295 | 48,52,66,652/– |
| 2 | 2018–19 | 3891 | 57,99,47,356/– |
| 3 | 2019–20 | 3750 | 54,65,28,369/– |

(எ) முகப்பேர் கிராமத்தினை மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட ஏதேனும் ஒரு சார்பதிவாளர் அலுவலகத்துடன் சேர்த்தால் அதன் விளைவாக கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் ஆவணப்பதிவில் மேலும் 50 சதவிகிதம் மற்றும் முத்திரை வருவாயில் சுமார் 55 சதவிகிதம் குறைய வாய்ப்புள்ளது.

(ஏ) எனவே, நொளம்பூர் மற்றும் முகப்பேர் ஆகிய இரு கிராமங்களையும் சேர்த்தால் ஒட்டுமொத்தமாக கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆவணப்பதிவில் சுமார் 70 சதவிகிதம் மற்றும் முத்திரை வருவாய் சுமார் 80 சதவிகிதம் பாதிப்பை ஏற்படுத்தும். இது ஒரு அலுவலகத்தின் பணிப்பளுவை மிகவும் குறைத்தும் மற்றொரு அலுவலகத்திற்கு ஏற்கனவே உள்ள பணிப்பளுவுடன் மேலும் அதிகப்படியான பணிச்சுமையை ஏற்படுத்தும். எனவே, நொளம்பூர் கிராமத்தை மட்டும் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லையிலிருந்து பிரித்து அருகில் உள்ள சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் சேர்க்கலாம்.

(ஐ) நொளம்பூர் கிராமத்திற்கு அருகில் மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட அண்ணாநகர் மற்றும் வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் நொளம்பூர் கிராமத்தினை வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலக எல்லையுடன் சேர்ப்பதே சரியாக இருக்கும். ஏனெனில், அண்ணாநகர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளை காட்டிலும் வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகள் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒட்டியே அமைந்துள்ளன.

(ஒ) 2018 முதல் 2020 வரையிலான 3 நிதியாண்டுகளில் வில்லிவாக்கம் கிராமத்தில் பதிவான ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விபரம்:–

| வ.எண் | ஆண்டு | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) கோடியில் |
|---|---|---|---|
| 1 | 2017–18 | 8712 | 79.65 |
| 2 | 2018–19 | 7597 | 117.48 |
| 3 | 2019–20 | 7534 | 107.34 |

(ஓ) நொளம்பூர் மற்றும் முகப்பேர் ஆகிய இரு கிராமங்களையும் வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் சேர்ப்பதினால் வட சென்னை பதிவு மாவட்டம், குறிப்பாக கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை எவ்வாறு ஈடு கட்டுவது என்பது குறித்து ஆராயப்பட்டதில், கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அமைந்துள்ள அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு ஆகிய கிராமங்களுக்குண்டான மூன்று நிதியாண்டின் ஆவணப்பதிவு மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட 2 கிராமங்களான அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு கிராமங்களை கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைப்பது பொருத்தமாக இருக்கும் என

அறியப்பட்டது. மேலும், மேற்கண்ட அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட 2 கிராமங்களும் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து அமைந்துள்ள தூரம், பதிவு, பொதுமக்கள் அலுவலகத்திற்கு வந்து செல்வதில் தேவையற்ற இடர்பாடுகள் மற்றும் காலவிரயம் ஏற்படுமா எனவும் உரிய கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. அந்த வகையில், மேற்கண்ட 2 கிராமங்களுமே கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தைச் சுற்றி அதிகபட்சமாக 1 – 1.5 கிலோ மீட்டர் தொலைவிலேயே அமைந்துள்ளன.

(i) அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு கிராமங்கள் அடங்கிய அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குரிய கடந்த மூன்று நிதியாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஆவணப்பதிவுகள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரம்:-

| வ.எண் | ஆண்டு | வருவாய் இலக்கு ரூ. (கோடியில்) | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) கோடியில் |
|---|---|---|---|---|
| 1 | 2017–18 | 140 | 18565 | 116.68 |
| 2 | 2018–19 | 200 | 19184 | 189.00 |
| 3 | 2019–20 | 225 | 19694 | 198.43 |

ii) அயனம்பாக்கம் கிராமத்தில் பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் ஈட்டப்பட்ட வருவாய்:–

| வ.எண் | ஆண்டு | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) கோடியில் |
|---|---|---|---|
| 1 | 2017–18 | 1068 | 17.4 |
| 2 | 2018–19 | 1124 | 18.6 |
| 3 | 2019–20 | 1201 | 19.2 |

iii) அத்திப்பட்டு கிராமத்தில் பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் ஈட்டப்பட்ட வருவாய்:–

| வ.எண் | ஆண்டு | பதிவு செய்த ஆவணங்கள் | ஈட்டப்பட்ட வருவாய் (ரூ.) கோடியில் |
|---|---|---|---|
| 1 | 2017–18 | 480 | 7.1 |
| 2 | 2018–19 | 521 | 7.5 |
| 3 | 2019–20 | 538 | 8.2 |

(iv) அத்திப்பட்டு மற்றும் அயனம்பாக்கம் கிராமங்களை உட்கொண்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் அம்பத்துார்/கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் இடையேயான தூரம் பின்வருமாறு:-

| வ.எண் | கிராமம் | வட்டாச்சியர் அலுவலகம் | தூரம் (மீட்டர்) |
|---|---|---|---|
| 1 | அத்திப்பட்டு | அம்பத்தூர் | 500 மீட்டர் |
| 2 | அயனம்பாக்கம் | பூந்தமல்லி | 750 மீட்டர் |

(ஔ) வட சென்னை பதிவு மாவட்டம் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு கிராமங்களை சேர்ப்பதால் அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணப்பதிவுகளும் முத்திரை வருவாயும் பெரிய அளவில் பாதிப்பதற்கு

Verified RealEstate

வாய்ப்பில்லை. மேலும், ஏற்கனவே அம்பத்தூர் அலுவலகத்தில் வருடம் ஒன்றிற்கு சுமார் 19,000 ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதால் அந்த அலுவலகம் ஒரு வேலைப்பளு மிகுந்த அலுவலகமாக உள்ளது. இவ்வாறு அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு கிராமங்களை கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றுவதால் அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வேலைப்பளு சற்று குறையும். இச்செயல் அலுவலக நிர்வாக சீரமைப்பிற்கும் பணியாளர் நலன் கருதியும் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

3. எனவே, புதியதாக நொளம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகத்தில் மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் 4 சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைந்துள்ளதால் வடசென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தினை மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைப்பதே பொருத்தமானதாகவும் முறையானதாகவும் இருக்கும். இதனால் ஒரே மண்டலத்தில் ஆவணப்பதிவுகள் மற்றும் முத்திரை வருவாய் மறு பகிர்ந்தளிக்கப்படும். அதே நேரத்தில் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஏற்படும் ஆவணப்பதிவுகள் மற்றும் முத்திரை வருவாய் இழப்புகளை சரிசெய்யும் விதத்தில் அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களை கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் சேர்த்து ஈடு செய்யலாம் என சென்னை துணைப்பதிவுத்துறை தலைவர் தெரிவித்துள்ள விவரங்களை ஏற்று, புதியதாக நொளம்பூர் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகத்தில் அமையவுள்ள மத்திய சென்னை பதிவு மாவட்ட வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் வட சென்னை பதிவு மாவட்டம் கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தினை இணைக்கலாம் எனவும், கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஏற்படும் ஆவணப்பதிவுகள் மற்றும் முத்திரை வருவாய் இழப்புகளை சரி செய்யும் விதத்தில் வட சென்னை பதிவு மாவட்டம் அம்பத்தூர் சார்பதிவாளர் எல்லைக்கு உட்பட்ட அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களை அதே பதிவு மாவட்டத்தில் அமைந்த கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கலாம் என தெரிவித்து இது தொடர்பாக உரிய ஆணையினை வழங்குமாறு பதிவுத்துறைத்தலைவர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்படி பதிவுத்துறைத்தலைவரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தினை, மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கலாம் என்றும், வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களை அதே பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கலாம் என்று அரசு தீர்மானித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேற்கூறப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய பணியிடங்கள் எதுவும் தோற்றுவிக்கப்படமாட்டாது என்றும், அதனால் பகராண்மை (redeployment) மூலம் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய நிலை எழவில்லை என்றும் பதிவுத்துறைத்தலைவருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலும், பதிவுத்துறைத்தலைவர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தினை, மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கலாம் என்றும், வட சென்னை பதிவு மாவட்டம் அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட அயனம்பாக்கம் மற்றும் அத்திப்பட்டு

ஆகிய இரண்டு கிராமங்களை அதே பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட வேண்டிய கிராமங்களின் விவரங்களை அனுப்பி வைத்து, இது தொடர்பான அறிவிக்கையினை வெளியிடுமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

7. அதன்படி, இவ்வரசாணையுடன், இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் 26.02.2021 அன்று சிறப்பு வெளியீடாக வெளியிடப்பட வேண்டும் என்று அரசு அறிவுறுத்துகிறது. மேலும், அறிவிக்கைகளை வெளியிடும் அரசிதழின் தலா 100 படி நகல்களை முறையே அரசு மற்றும் பதிவுத்துறை தலைவருக்கு அனுப்பிவைக்குமாறு அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–18.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–35.
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்), வட சென்னை.
(பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 வழியாக).
மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்), மத்திய சென்னை.
(பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 வழியாக).
துணைப்பதிவுத் துறைத் தலைவர், சென்னை.
(பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 வழியாக).

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி) அவர்களின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை–9.
வணிகவரி மற்றும் பதிவுத் (எச், ஜே, எம் மற்றும் யு) துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9. (2)
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26.02.2021
பிரிவு அலுவலர்
26/2/2021

Verified RealEstate™

## APPENDIX

## NOTIFICATION-I

Under sub-section (1) of section 5 of the Registration Act, 1908 (Central Act XVI of 1908), the Governor of Tamil Nadu hereby, with effect on and from 26.02.2021 alters the limits of the Registration Sub-District of Konnur in the Registration District of Chennai (North) by transferring the village Nolambur which form part of the Registration Sub-District of Konnur in the Registration District of Chennai (North) to the Registration Sub-District of Villivakkam in the Registration District of Chennai (Central).

### TABLE

| Sl No. | Name of the Registration District | Village Number and Name of the Village | Existing Registration Sub-District | Registration Sub-District/Registration District now attached |
|---|---|---|---|---|
| 1. | Chennai (North) | 1. Nolambur | Konnur | Villivakkam/ Chennai (Central) |

## NOTIFICATION-II

Under sub-section (1) of section 5 of the Registration Act, 1908 (Central Act XVI of 1908), the Governor of Tamil Nadu hereby, with effect on and from 26.02.2021 alters the limits of the Registration Sub-District of Ambattur in the Registration District of Chennai (North) by transferring the villages Ayanambakkam and Athipattu which form part of the Registration Sub-District of Ambattur in the Registration District of Chennai (North) to the Registration Sub-District of Konnur in the Registration District of Chennai (North).

### TABLE

| Sl No. | Name of the Registration District | Village Number and Name of the Village | Existing Registration Sub-District | Registration Sub-District now attached |
|---|---|---|---|---|
| 1. | Chennai (North) | 44. Ayanambakkam | Ambattur | Konnur |
| 2. | Chennai (North) | 5. Athipattu | Ambattur | Konnur |

BEELA RAJESH
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

//Forwarded / By Order//

26.02.2021

SECTION OFFICER

26/2/2021